# ஐங்குறுநூறு ஆய்வுக்கோவை

## மூன்றாம் தொகுதி


பதிப்பாசிரியர்

பேராசிரியர் இரா. ஜெகதீசன்

பேராசிரியர் ந. சொக்கலிங்கம்

பேராசிரியர் மு. மணிவேல்

பேராசிரியர் இரா. மோகன்

முனைவர் தி. சுரேசு



சங்க இலக்கிய ஆய்வு மையம்

மதுரை



3

சங்க இலக்கிய ஆய்வு மையம்

ஐங்குறுநூறு ஆய்வுக்கோவை



2008




# ஐங்குறுநூற்றில் கல்லா சமூகச் சிந்தனைகள் ஒரு சொல்லாடல்

இரா. விசயன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
கொங்கு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

## முன்னுரை

தமிழில் முகிழ்ந்துள்ள இலக்கியங்கள் அனைத்தும் கல்வியின் வெளிப்பாடு என்று கூறுவது சாலப்பொருந்தும். கல்வியின் பயனாய், தாம் கற்றதை எதிர்வரும் சமூகத்திற்கு எடுத்தியம்ப முன்னோர் பயன்படுத்திய கருவே இலக்கியப் படைப்புகள் எனலாம். எத்துணை விதமானக் கல்வி சமூகத்துள் விதைக்கப்பட்டதோ, அத்துணை அளவிற்கு அது கற்பக விருட்சமாக வளர்ந்து இன்றும் சமூகத்திற்கு நல்நிழல் நல்கி வருகின்றது. இலக்கியப் படைப்பில் வெளிப்படும் எண்ணிலடங்கா பார்வைகள், கோணங்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் என முன்னவர் விரித்திருக்கும் எல்லைகள் எல்லாம் கல்வியின் துணைகொண்டே கல்வி இல்லாது, கற்பனை இல்லை, நற்கவி இல்லை. அதை வடித்தெடுக்கும் வழியும் இல்லை. கல்வியின் பயனின்றிச் சமூகம் மாற்றம் பெறவிழைவதும் இல்லை என்பதை, தமிழர்கள் உணர்ந்திருப்பதன் பயனாக, அதைத் தமது வாழ்வோடு ஒன்றினைத்து வைத்தனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பல்லாயிரம் ஆண்டுகள் வளர்ந்து வந்த தனது பழமையை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது.

கல்வியைத் திட்டமிட்டுக் கற்று, செயல்படுத்தி, சமூகம் வாழத் தன்னைக் காலந்தோறும் உயிர்ப்பித்துக் கொள்வதால்தான் நம்மொழியும், இலக்கியங்களும் உலகின் முகவரிகளாக விளங்குகின்றன. எழுத்தாணியில் எழுதியிருப்பினும், எழுத்தெண்ணி எழுதியிருப்பதால்தான் தமிழ் இலக்கியங்கள் உலக அச்சாணியாய் விளங்குகின்றன. தமிழர் கல்வியை, கலைகளாகக் கற்று அதைத் தமது வாழ்வியலோடு ஒன்றிணைத்துக் கொண்டு, உலக அரங்கில் தமிழ்ச் சமூகத்தை முன்னிறுத்தி வைத்திருப்பது கல்வியின் மூலமாகத்தான் என்பது மறுக்க இயலாத ஒன்று. இதன்வழி



அகம் பேசும் ஐங்குறுநூற்றில் வெளிப்படும் கல்லா சமூகம் சார்ந்த கருத்துக்களை அடையாளப் படுத்துமுகமாக இவ்வாய்வு அமைகின்றது.

ஐங்குறுநூற்றுப் படைப்பாக்கத்தில் இருந்தே கற்றறிந்தோர் ஒன்றிணைந்து தமக்குள் ஓர் அமைப்பை ஏற்படுத்தி, சமூக வாழ்விற்கு ஏற்றம் தரும் விதமாய் இலக்கியத்தின் வழி தமது சிந்தனைகளை வெளிப்படுத்துத் தம்முள் கைகோர்த்து நின்ற திறம் கல்வியின் செயல்முறைக் கூறு எனத் துணிந்துரைக்கலாம்.

கல்லா என்னும் சொல் அறியாத கல்லாத என்னும் பொருள்களில் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. கல்லா மக்களைக் கொண்ட சமூகம் நற்சமூகமாய் இருத்தல் இயலாது என்பது கல்வியாளர் களின் துணிபு. இல்லாமையைவிடக் கொடியது கல்லாமை என்பதைத் தமிழர் உணர்ந்ததன் பயனாக, அதைத் தமது படைப்புகளில் வெளிப்படுத்தி, கல்லாத சமூகம் இல்லாத நிலையை எட்டத் தமது கவியைக் கல்வியை நோக்கிச் செலுத்தினர். கல்லாது ஒருவன் தனது தொழிலைக்கூடச் செவ்வனே செய்தல் அரிது என்பதை ஐங்குறுநூறு,

கல்லாக் கோவலர் கோலிற் தோண்டிய
ஆனீர்ப் பத்தல் யானை வௌவுங் (ஐங். 304)

எனக் காட்டுகிறது.

நூல் கல்வி, எழுத்துக்கல்வி தோன்றாத காலகட்டத்தில், 'கல்லா' என்னும் சொல் தன்தொழில் கல்லாத, தன் தொழிலன்றிப் பிற கல்லாத என்ற பொருளில் பயன்படுத்தப் பெற்றிருக்கலாம். கல்வியின் பெருமையைப் பேசும் காலகட்டத்தில், 'கல்லா' என்னும் சொல் நூல்களைக் கல்லாத, எழுத்தினை அறியாத என்னும் பொருளிலேயே பயின்றிருக்க வேண்டும். மேலும் சங்க நூல்கள், கல்லாத தன்மையாகக் குறிஞ்சி, முல்லை, பாலை நிலத்தினரையே பெரிதும் குறிப்பிடுகின்றது. மருத நிலத்தினைச் சார்ந்தே எழுத்துக்கல்வி வழங்கியதால் பிற நிலத்தினர் கல்லாதவர்களாகக் காட்டப் பெற்றனர்.

கல்லாதவர் எனப் பிறநிலத்து மக்கள் சுட்டப் பெறுவது, மருதநிலம் சார்ந்த நகரப் பண்பாட்டினை, அப்பண்பாட்டினை அறியாத இனக்குழு மக்களின்மீது ஏற்றிப் பாடப்பெற்றதே எனலாம் என்பது பழனிவேலுவின் கருத்து (தமிழர் கல்வி வரலாறு, ப.68). கல்லாதவர் செயல் எத்தகையது என்பதை ஐங்குறுநூறு, மந்தியின் மேல் ஏற்றிப் பின்வரும் பாடல்களின்வழியாக விளக்குகின்றது.

கல்ல மந்தி தனது தொழிலைத் திறம்படக் கல்லாத மந்தி எவ்வாறு பிழையாய் செய்து, பிறர் கேலிக்கு ஆளாகுமோ, அதைப்போல கல்லாத மாந்தர் ஆளாகுவார்கள் என்பதை ஐங்குறுநூறு விளக்குகின்றது.

கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்
அருவரைத் தீந்தேன் எடுப்பி அயலது
உருகெழு நெடுஞ்சிமைப் பாயும் நாடன்
இரவின் வருதல் அறியான்
வரும்வரும் என்ப தோழி யாயே (ஐங். 272)

என்ற பாடலில் கல்லாத மந்தி தான் செய்வதறியாது செய்யும் செயல், எவ்வாறு பிறர்க்குத் துயரத்தை ஏற்படுத்துமோ, அதுபோல் தலைவனது செயல் தலைவிக்குத் துயரத்தை ஏற்படுத்தும் என்பதை,

மந்திக் கணவன் கல்லாக் கடுவன்
ஒண்கேழ் வயப்புலி குழுமலின் விரைந்துடன்
குன்றுயர் அடுக்கம் கொள்ளும் நாடன்
சென்றனன் வாழி தோழிஎன்
மென்தோள் கவினும் பாயலும் கொண்டே (ஐங்.274)

என்ற பாடலில், அகம் சார்ந்த தலைவியின் துயரத்திற்குக் காரணமான தலைவன், கல்லாத மந்தியின் செயலோடு உவமைப்படுத்தி, கல்லா சமூகத்தின் இயல்பு இஃதெனக் காட்டுகின்றார் ஆசிரியர்.

குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனொடு உகளும்
குன்ற நாடநின் மொழிவல் என்றும்
பயப்ப நீத்தல் என்இவள்
கயத்துவளர் குவளையின் அமர்த்த கண்ணே (ஐங்.277)

கல்லாது இருக்கும் வரை மனிதன் மந்தியே. அவனிடம் நன்மை தீமை பிரித்தறியும் திறனும் இராது. கல்லாது உடலைச் சுமையாய்ச் சுமந்து வாழும் மனிதன் சமூகத்திற்குச் சுமை. அவனது செயலால் சமூகத்திற்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. அவனது செயல் கல்லா மந்தியை ஒத்ததே என்பதை,



கருவிரல் மந்திக் கல்லா இளம்பார்ப்பு
இருவெதிர் ஈர்ங்கழை ஏறிச் சிறுகோல்
மதிபுடைப் பதுபோல் தோன்றும் நாட
வரைந்தனை நீஎனக் கேட்டுயான்
உரைத்தனன் அல்லனோ அஃதுதான் யாய்க்கே(280)

என்ற பாடல் விளக்குகின்றது. கல்லாது ஒருவன் உடல் வலிமையை மட்டும் துணையாகக் கொண்டு வாழ்வானெனில், அஃது நகைப்பிற்குரியது. கல்லாத யானை மதம் கொண்டு செய்யும் செயல் எவ்வாறு தீமை பயக்குமோ அதைப்போலக் கல்லாதவன் செயல் அமையும் என்பதை,

பல்லிடும் கூந்தல் பசப்பு நீவிடின்
செல்வேம் தில்ல யாமே செற்றார்
வெல்கொடி அரணம் முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே (ஐங். 429)

என்று ஐங்குறுநூறு பேசுகின்றது. கல்லாது ஒருவன் மேற்கொள்ளும் செயல் எவ்வாறு பயனற்றது என்பதை மேற்கண்ட பாடல்கள் உணர்த்துகின்றன. எச்செயலைச் செய்வதற்கும் மனிதருக்குத் தேவையாக நிற்பது அறிவு. அந்த அறிவை வளர்க்கும் கருவியே கல்வி. கற்றவர் செய்து முடிக்கும் ஒருசெயலை, கல்லாதவன் செய்யும் வகையறியாது தவிக்கும் தவிப்பைச் சமூகத்தில் இன்று நேரடியாகக் காணும் காட்சியாக இருக்கின்றது.

தலைவியின் வருத்தத்திற்குக் காரணமானவன் தலைவன். அவனது செயல், கல்லாத மந்தியையும் யானையையும் ஒத்தது என்று ஐங்குறுநூறு விளக்குவதில் இருந்தே புறத்திற்கு மட்டுமின்றி, அகவாழ்விற்கும் கல்வி இன்றியமையாதது என்பது தெளிவாக அறியலாகின்றது. கல்வி கற்று அதன்வழி ஒருவன் தன் வாழ்வில் வாழ்வானே யானால், அஃது அவனுக்கும், அவன் வாழும் சமூகத்திற்கும் நல்வாழ்வை என்றைக்கும் நல்கும் என்பதே தமிழ்

இலக்கியங்கள் வழங்கும் செய்தி. கற்றோர் அவை மட்டும் அன்றிக் கல்வி பயிலும் பள்ளியும் அன்று வழக்கில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் ஏராளம். பள்ளிகளைத் துயிலிடங்கள், ஓய்விடங்கள், தங்குமிடங்கள் எனவும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

*தொகுப்புரை*

ஐங்குறுநூற்றில் கல்வி குறித்த செய்திகள் மிகுதியும் இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், அகப்பாடல்களில் உவமைகளை எடுத்தாளும் முகமாகக் கற்றல் சிறப்பு உணர்த்தப் பட்டுள்ளது. ஆற்றாமைக்குக் காரணமான தலைவன், கல்லாதவர் செயலை ஒத்தவனாய், கல்லா மந்தியாய் தோழியால் சுட்டப்பெறுகின்றான். கல்லாதவர் தமது தொழிலைத் திறம்படச் செய்தலாகாது என்பதற்குக் கோவலர் செயல் உதாரணமாக ஐங்குறுநூறு சுட்டுகின்றது.

உடல் வலிமையை மட்டும் பெருக்கி வாழும் மக்கள், கல்லாத யானையோடும் அதன் செயல்களோடும் ஒப்புமைப் படுத்திக் காட்டப் பட்டுள்ளது. பள்ளி என்பதற்கு உறைவிடம் என்னும் பொருளே ஐங்குறுநூற்றில் எடுத்தாளப் பட்டுள்ளது. நூல் உருவாவதற்குக் காரணமான கற்றவர் கூட்டமைப்பே, கல்வியியல் குறித்த செயற்பாடுகளில் முதன்மையாக விளங்குகின்றது. அக வாழ்விற்கு மட்டுமின்றி, புற வாழ்விற்கும் தமிழர் முதன்மையாக முன்மொழிவது அறமே. இவ்வறத்தைக் கற்றலே சங்க காலத்தில் கல்வியாக முன்நிறுத்தப் பட்டது எனலாம். கல்வியால் மட்டுமே ஒரு சமூகம் பரிணாம வளர்ச்சியை எய்தும் என்பது மட்டும் மறுக்க முடியாத பேருண்மை. அகநூலாக அமைந்திருப்பினும், அதிலும் கல்விச் சிந்தனைகளை விதைத்திருக்கும் ஐங்குறுநூறு போன்ற சங்க இலக்கியங்கள் தமிழர் தம் வாழ்விற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றன எனில் மிகையன்று.



## ஐங்குறுநூற்றில் வாழ்வியல்

சு. விவேகலதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி

*முன்னுரை*

வரலாறு என்பது அரசானைப் பற்றிய, அரசாட்சியைப் பற்றிய படிப்பு மட்டுமன்று. அவ்வரசாட்சிக்குப் பின்புலமாக இருக்கும் பொதுமக்களின் வாழ்க்கையையும் படிப்பது. இதுவே சமுதாய வரலாறு, ஐங்குறுநூறு வழிநின்று சங்ககால மக்களின் வாழ்வியலை இக்கட்டுரையில் காண்போம்.

*ஊர்க்காவல்*

மன்னனின் தலையாய கடமை மக்களைப் பேணிப் பாதுகாத்தலாகும். ஊர்மக்களைக் காவல் காப்பதற்கு வீரர்களை நியமித்திருந்தனர். அப்பணியாளர்கள் மாலை நேரத்தில் வெள்ளித்தடியைத் தரையில் வீசி விலங்குகளைப் பயமுறுத்தி ஓடச்செய்தினர் என்பதை,

*மாலை வெண்காழ் காவலர் வீச (421)*

என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது

*போர்கள்*

வெண்வேல் வேந்தனின் அருந்தொழிலான போருக்கு உயிர்மூச்சாக நிற்பவர்கள் வீரர்களே...

*முரசு பாடு அதிர ஏவி*
*அரசு படக்கடக்கும் அருஞ்சமத் தானே... (ஐங்.427)*

என்று தலைவன் குறிப்பிடப்படுவதால் அத்தலைவனும் சிறந்த வீரனாகக் காட்டப்படுகின்றான். இப்படிப்பட்ட வீரர்கள் வீரத்துடன் போரிட்டு, போர்க்களத்தில் இறந்து விட்டால், அவர்களுக்கு மரியாதை செய்யும் பொருட்டு, அவ்வீரனின் பெயரையும், பெருமையையும், பொறித்துக், கல்நட்டு வழிபடுவது பண்டைய மரபாகக் காணப்படுகிறது.

*விழுத்தொடை மறவர் வில்லிடைத் தொலைந்தோர்*
*எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பிணர் (352)*

என்று நடுகல் வழிபாட்டை ,ஐங்குறுநூறு இயம்புகிறது.